1968 மார்ச் 23] [திரு. செ. பாலசுப்பிரமணியன்

இந்திய சர்க்காருக்கு என்ன முறையில் வலியுறுத்தி வருகிறது என்பதைப் பற்றியெல்லாம் முதலமைச்சர் அவர்கள் சொல்வார்களானுல் நலமாக இருக்கும். இதைப் பற்றி விவாதிக்க இந்தச் சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இதுபற்றி மத்திய அரசு மாநில அரசிடத்தில் தகவல் கேட்டிருக்கிறது. தகுந்த தகவல்கள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே இதுபற்றி தனியாக அவையை ஒற்றிவைத்துத்தான் பேச வேண்டுமென்ற அவசியம் இல்லை. உறுப்பினர் அவர்கள் பொது நிர்வாகம் பற்றி பேசுகிற நேரத்தில் இவைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிடலாம். இங்கிருந்து சென்றிருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் இதைப் பற்றி விரிவாக விவாதிப்பதற்கு சௌகரியங்கள் எல்லாம் இருப்பதால் இதை விவாதிக்க அவையை ஒற்றிவைக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் காரியத்தில் மாநில அரசு ஈடுபட்டிருந்தாலும் நம் விதி 50 (10) படி இது முற்றிலும் தமிழக அரசின் பொறுப்பிற்கு உட்பட்டதாக இல்லை. எனவே அனுமதி மறுக்கப்படுகிறது.

அடுத்து, 41-வது விதியின்கீழ் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. சு. துரைசாமி அவர்கள் ஒரு காரியத்தைக் கொண்டு வருகிறார்கள்.

3. கவன ஈர்ப்பு.

பல்லடம் தாலுகாவில் பருவமழை தவறியதும் கூட்டுறவுச் சங்கக் கடன் வசூல் ஒத்திவைப்பும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட அவசரமும், பொதுமுக்கியமும் வாய்ந்த காரியத்தை நான் சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

"பருவமழை தவறிய காரணத்தால் கோவை மாவட்டம் பல்லடம் வட்டத்தில் பயிர் விளைச்சலின்றியும், குடிதண்ணீர்கூட இல்லாமலும் கால்நடைகளைப் பராமரிக்க முடியாமல் விற்றுக்கொண்டும் மக்கள் அவதியுறுவதால் கூட்டுறவு நாணயச் சங்கங்களின் மூலமாக வழங்கப்பட்ட கடன்களை ஓராண்டுக் காலம் ஒத்திவைக்கவேண்டும்".

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழே இந்த விவர அறிக்கையை அளிக்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி வழங்கியுள்ள கடன்களை, கோயம்புத்தூர் மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததன் காரணமாகக் குடியானவர்கள் உரிய தேதியில் திருப்பிச் செலுத்த இயலவில்லையென, அம் மாவட்டத்தின் பல்லடம், தாராபுரம் வட்டங்களில் உள்ள கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் முறையிட்டுள்ளன. எனவே, கோயம்புத்தூர் கூட்டுறவு மத்திய வங்கியின் நிர்வாகக் குழு, பல்லடம் வட்டத்தில் பருவமழை பொய்த்ததன் காரணமாக விளைச்சல் மிகவும் குன்றியுள்ள பகுதிகளைக் குறிப்பிடுமாறு, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டது. அப்போதுதான், அத்தகவலின் அடிப்படையில், குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றியமைப்பதன் மூலம் குடியானவர்களுக்கு உதவி அளிப்பது குறித்து ஆலோசிக்க முடியும். பல்லடம் வட்டம் முழுவதிலும் தாராபுரம், கோபிசெட்டிபாளையம், அவனுசி, ஈரோடு வட்டங்களில் சில வட்டாரங்களிலும் அணு வாரிக் கண்டுமுதல் ஆறணுவிற்கும் குறைவாக இருந்தது என்று கலெக்டர் தெரிவித்துள்ளார். எனவே, இந்தப் பகுதிகளில்

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய குறுகிய காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாக மாற்றுவதன் மூலம் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலத்தை நீட்டிப்பதற்கான செயற் குறிப்புகளை அனுப்புமாறு கோயம் புத்தூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியை கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கேட்டுள்ளார். இந்தச் செயற் குறிப்புகள் கிடைத்தவுடன் பதிவாளர் இது குறித்து மேற்கொண்டும் நடவடிக்கைகளைத் தொடருவார்.

பல்லடம் வட்டத்தில் கூட்டுறவு மேற்பார்வை யூனியன்கள் மூன்றும், 137 கிராமக் கடன் வழங்கு சங்கங்களும் செயலாற்றி வருகின்றன. இவற்றில் 99 சங்கங்கள் வேளாண்மைக் காரியங்களுக்காக கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியிடமிருந்து கடன் வாங்கியுள்ளன. இப்பகுதியில் பருத்தியும், புகையிலையும் முக்கியப் பயிர்களாகும். சிறு பான்மைப் பகுதியில் சோளம் பயிரிடப்படுகிறது. இவ்வாண்டு ஜனவரி 1-ம் தேதி வரையில் கூட்டுறவுக் கடன் நிலுவை ரூ. 55,44,583 ஆகும். இதில் ரூ. 3,11,398 உரிய காலத்திற்குப் பின்னரும் செலுத்தப்பாடமல் நிலுவையாய் இருந்தது. 1—2—1968 தேதி முதல் 31—5—1968 தேதி வரை செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 33,83,291 ஆகும். இந்தப் பகுதியில் நிலவிவரும் வறட்சி நிலைமை காரணமாக, இதில் எவ்வளவு தொகையை வசூலிப்பது தள்ளிப்போடப்பட வேண்டும் என்பது குறித்துக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் ஆய்வு செய்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. என். பரமசிவம் அவர்களின் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் அமைச்சர் அவர்கள் கூறியது பதிலாகக் கருதப்படுகிறது.

அடுத்து, திரு. சோ. அழகர்சாமி அவர்கள் தீர்மானத்திற்கு முன் அறிவிப்பு கொடுத்துவிட்டு இருப்பிடத்தில் இல்லாததால், தீர்மானம் பேரவையின அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப் படுகிறது.

4. அரசினர் தீர்மானம்

அவை அலுவல் வரிசை மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 26—3—1968-ல் நாம் எடுத்துக் கொள்ளவேண்டிய கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்பதை 25—3—1968-லும், 25—3—1968-ல் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்பதை 26—3—1968-லும் மாற்றி எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

5. 1968—69-ம் ஆண்டிற்கான நிதி கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண்—26. பாசனம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழி கிறேன்:

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,87,64,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

திரு. செ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத் திட்டங்களை நவீனமாக்கி தண்ணீரைச் சிக்கனப்படுத்துவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 26-பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 8,87.64,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.